# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்.173/ 2019/பே

ஆணை நாள்: 14 –02–2020.

திரு M. ராஜசேகரன்,
27/8, கிழக்குத் தெரு,
பொத்தனூர்,
நாமக்கல் மாவட்டம்–638181. -- முறையீட்டு மனுதாரர்

திரு.கே.வெங்கடேசன்,
முன்னாள் செயல் அலுவலர்,
பொத்தனூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி, கிழக்குத் தெரு, கதவு எண். 27/8, என்ற முகவரியில் வசிக்கும் திரு.எம்.ராஜசேகரன் என்பவரது 09.11.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.11.2019ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 173/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி கிழக்குத் தெருவில் வசிக்கும் திருமதி.தேவிகா, க/பெ.திரு சசிகுமார் என்பவர் பொத்தனூர் பேரூராட்சி மூ.மு.எண். 461/2011/நாள் 27.11.2011ன் மூலம் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளார் எனவும், மேலும் அரசு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து இதனை பேரூராட்சி செயல் அலுவலர் கட்டிடம் கட்டி முடிந்த பின்னர், மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்யத் தவறியுள்ளதுடன், உரிய நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

09.12.2019 நாளிட்ட நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் புகாருக்குட்பட்ட நபருக்கு பேரூராட்சி மூ.மு.எண்.461/2011 நாள் 27.12.2011ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்ட கோப்பில் கட்டிட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் மனையின் மொத்த சதுர அடி 1,575 சதுர அடி என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதற்கான கிரைய ஆவணத்திலும் மேற்படி அளவீடு குறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கிரைய ஆவணத்தின்படியே கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சி மூலம் வழங்கப்பட்ட அங்கீகார அனுமதியில் தவறான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் ஏதேனும் வழங்கப்பட்டிருப்பின் வழங்கப்பட்ட அனுமதி உத்திரவு தானே ரத்தாகிவிடும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருமதி.தேவிகா என்பவர் கட்டியுள்ள கட்டிட நிலப்பரப்பில் ஆக்கிரமிப்பு ஏதேனும் இருப்பின் அதனை அகற்ற பேரூராட்சி ந.க.எண். 475/2019/நாள்.05.11.2019–ன்படி நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டாட்சியருக்கு கடிதம் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனு தொடர்பாக ஏற்கனவே 09.12.2019

அன்று அளித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்களையே தெரிவித்தும், முறையீட்டு மனுதாரர் ஆண்டிற்கு சுமார் 20 மனுக்கள் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்து தகவல் பெறுவார் எனவும், அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நபர்கள்/கட்டிட உரிமையாளர்கள் ஆகியோரை மிரட்டி பணம் பெறுவார் எனவும், பணம் பெறும் ஒரே நோக்கில் இது போன்று மனு எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ள செய்திகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும் தெரிவித்து முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யவும் கோரியுள்ளார்.

03.12.2019 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தில் 05.02.2020 அன்று ஆஜராக அழைப்பாணையிடப்பட்டும் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் 05.02.2020 நாளிட்ட வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் புகாருக்குட்பட்ட நபருக்கு உரிய ஆவணங்களின் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் அதனை அகற்ற பரமத்தி வேலூர் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் புகார் தெரிவித்துள்ள திருமதி.தேவிகா என்பவர், கிராம நத்தம் சர்வே எண்.177/22ல் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள புகார் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அவர்களால் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு க.எண்.சி.ப.121/2019(ஆர்.4) நாள்.05.09.2019ல் அறிக்கை அளிக்கப்பட்டு மனுதாரருக்கும் நகலிடப்பட்டுள்ளது.

மேலும், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணையிடப்பட்டும், ஆஜராத நிலையில் புகார் தொடர்பாக அவருக்கு கூறிக் கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை எனக் கருதி செயல் அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டு இம்முறையீட்டு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

17.2.20

செயலாளர்.

பெறுநர்

1.திரு ஆ. ராஜசேகரன்,
27/8, கிழக்குத் தெரு,
பொத்தனூர்,
நாமக்கல் மாவட்டம்–638181.

2.செயல் அலுவலர்,
பொத்தனூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)